முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. என். ராமகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.
2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் நாள் செவ்வாய்கிழமை

இடைநிலை மனு எண். 03/2024
in
அசல் வழக்கு எண். 645/2023

செல்லம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராமசாமி கவுண்டர்
2. வேலப்பன்
3. வேலம்மாள் (எ) பாப்பா
4. பழனியம்மாள்
5. பெருமாள்
6. வேலம்மாள் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 02.01.2025 ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.கிறிஸ்டோபர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

## உத்தரவு

மனுதாரர்/ வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(2)–ன் கீழ் மனுவில் கூறப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து, ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்களை ஏற்கனவே இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்/வாதி தற்போதுதான் வருவாய் பதிவேடுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களையும், உண்மை நகல்களையும் பெற்றுள்ளார். மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டு விடும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

4. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

6. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

7. தீர்வு:–

மனுதாரர்/ வாதி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 7

விதி 14(2)–ன் கீழ் மனுவில் கூறப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து, ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

8. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதுரையில் மனுதாரர்/வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யும்போது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்களை ஏற்கனவே தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்/வாதி தற்போதுதான் வருவாய் பதிவேடுகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களையும், உண்மை நகல்களையும் பெற்றுள்ளார் என்றும், மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றும் எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் கூறினார். விசாரணை நீதிமன்றம் வழக்கின் இரு தரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. மனுதாரர்/ வாதிக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க உரிய சந்தர்ப்பமும், உரிய வாய்ப்பும் அளிக்க வேண்டியது அவசியமாகின்றது. மனு கால தாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற காரணத்திற்காக மனுவை நிராகரிக்க இயலாது. மனுதாரருக்கு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு அனுமதிக்க வேண்டியது அவசியமாகின்றது. மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தால் Suganthi (dead) by Lrs. V.P.Rajkumar என்ற வழக்கில் வழங்கப்பட்ட 2020(3) MWN (Civil) 561ல் வெளியாகியுள்ள முன் தீர்ப்புரையில் பத்தி எண்.9–ல் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இந்த வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்துவதாக உள்ளது. மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணங்கள் ஏற்கும்படியாக

உள்ளது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதுரை ஏற்கும்படியாக உள்ளது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி இந்த மனு அனுமதிக்கத்தக்கது என பிரச்சனையின் மீது தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் தேதியான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RAMAKRISHNAN

Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2025.01.21 19:03:24 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

N RAMAKRISHNAN

Digitally signed by N RAMAKRISHNAN
Date: 2025.01.21 19:03:39 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.